
உ

சிவமயம்

# ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர்

## கல்விக் கழகம்

## சிறப்பு மலர்



# Sri Meenakshi Sundareswarar

# Education Association

## KILASAVALPATTI

## SOUVENIR 1981

உ

சிவமயம்

# Sree Meenakshi Sundareswarar Education Association.

## KILASAVALPATTI

S. M. S. E. ASSOCIATION,
KILASAVALPATTI.
(RAMNAD DIST.)

## SOUVENIR

## 1 - 11 - 1981

உ

சிவமயம்

# திருமகள் வாழ்த்து

காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி,
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர் — வீடுகட்கு,
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமிநீ,
என்றைக்கும் நீங்காது இரு,

நீங்காது நின்மகனும் நெடிய மாநிதியும்,
பாங்காக அன்றுவந்த பாற்கடல்போல் — தேங்காது,
நன்ருக நீ இருந்து நாளும், வளம்பெருக்கி,
என்றைக்கும் நீங்காது இரு,

-- பாடுவார் முத்தப்ப செட்டியார்.

SRI MEENAKSHI SUNDARESWARAR Hr. Sec. SCHOOL

அன்பு ★ பண்பு ★ அறிவு

கல்வி

KILASAVALPATTI

OUR

SCHOOL EMBLEM

*Our Heartfelt Homage To The*

*Late PRESIDENTS and the Late SECRETARY*



E. N. M. N.Narayanan Chettiar



E. N. Kasiviswanathan Chettiar



M. AL. AR. Alagappa Chttiar



E. N. K AL. Alagappa Chettiar

*Our Heartfelt thanks to the HEADMASTERS*

*who brought up our institution.*



Thiru. R. Subramania Iyer B.A.L.T.
(S. M S. Hr Ele School) 1930-40



Thiru. V. Srinivasan. avl
S M S. Higher Ele School



**Shri. K. L. Kannappan,**
**B. A., B.Ed.,**
**Headmaster,**
**S. M. S. Hr Sec. School**



**Shri. AL. Murugappan,**
**S. M. S. Hr. Sec School.**
**(Honourary Assistant**
**S. M. S. Education Association)**

# Members of the Present Executive Committee.




Sri ST. PR. Thittani Chettiar
(PRESIDENT)



Sri RM. PL. Alagappa Chettiar, B. Sc.
(SECRETARY)



Sri AL. A. M. KR. Kasiviswanathan, (Ex. SECRETARY)



Sri KT. N. RM. T. Thenappa Chettiar



Sri. RM. Alagappa Chettiar

# Old Student of Our School and author of 'Ninaivu Anjali'



M. Chidambaram. B.Com. (Hons). B. L.



Educational Minister and Ex-Governor of Tamil Nadu With the Headmaster of our Ele. School

Thiru. K. R. Ramavenkata Subramanian.

# OUR SOUVENIR COMMITTEE



Shri. RM. Muthiah
Chairman, Bank of Madurai Ltd.



Shri. ST. PR Thittani Chettiar
President



Shri. M. Alagappan, M.A.
Manager,
Kottyam Textiles Manager



Shri. RM. PL. Alagappa Chettiar
B. S c.,
Secretary

P.T.O.



RM. M. SM. Muthappa Chettiar



Sri T. M.KR. K. Ramanathan Chettiar



Sri AR.. KN. Arunachalam B. Sc. (Agri)



Sri E. N. M. N. Muthiah



Sri N. S. K R S. Karuppiah Chettiar

*S. M. S. Education Association,*

*KILASAVALPATTI.*

## List of Members - 1956.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Thiru. | E N. Kasiviswanathan Chettiar | | President |
| 2 | ,, | AL A M KR. Kasiviswanathan Chettiar | | Secretary |
| 3 | ,, | N S KR. Chockalingam Chetiiar | ... | Executive Council Member. |
| 4 | ,, | K. T. N. RM. T Thenappa Chettiar | | ,, |
| 5 | ,, | M. AL. AR. Alagappa Chettiar | | ,, |
| 6 | ,, | AR. K. Kannappa Chettiar | | ,, |
| 7 | ,, | T. M. KR. K Ramanathan Chettiar | ... | ,, |
| 8 | ,, | S. RM. Alagappa Chettiar | | ,, |
| 9 | ,, | E. N. M.N. Narayanan Chettiar | ... | ,, |
| 10 | ,, | M. RM RM. Chidambaram Chettiar | | ,, |
| 11 | ,, | RM. M. SM. Muthappa Chettiar | | |
| | ,, | V. Gopalakrishnan, Headmaster | ... | (Ex office) |
| 12 | ,, | M. AL. MR. PR. Periakaruppan Chettiar | ... | Member. |
| 13 | ,, | M. AL SP. AL. Subramanian Chettiar | ... | ,, |
| 14 | ,, | A. AL. Chockalingam Chettiar | ... | ,, |
| 15 | ,, | V. SP Subramanian Chettiar | ... | ,, |
| 16 | ,, | PL. M. CT. M. Kasiviswanathan Chettiar | ... | ,, |
| 17 | ,, | M. MP. Muthuppalaniappa Chettiar | ... | ,, |
| 18 | ,, | K. T. N. T. M. Thenappa Chettiar | ... | ,, |
| 19 | ,, | AR. K. Valiiappa Chettiar | ... | ,, |
| 20 | ,, | M. AL. Ramanathan Chettiar | ... | ,, |
| 21 | ,, | M. CT. Krishnappa Chettiar | ... | ,, |
| 22 | ,, | K. T. N. A. Thenappa Chettiar | ... | ,, |
| 23 | ,, | T. M. KR. S. Thiyagarajan Chettiar | ... | ,, |
| 24 | ,, | M. AR. Kasiviswanathan Chettiar | ... | ,, |

P. T. O.

S. M. S. Higher Secondary School.

KILASAVALPATTI.

# Our Staff Members.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Thiru. | L. Kannappan | B. A., B. Ed. | Headmaster. |
| 2 | " | B. Radhakrishnan | M. A., B. Ed. | P. G. Asst. |
| 3 | " | SP. Karuppiah | B. Sc., B. T. | B. T. Asst. (Selection grade) |
| 4 | " | S. Ramasubramanian | B. Sc., B. Ed. | " " |
| 5 | " | SP. Ramanathan | B. Sc., B. Ed. | " " |
| 6 | " | L. Kannappan | B. Sc., B. Ed. | " — |
| 7 | " | M. Viswanathan | B. A., B. Ed. | " — |
| 8 | " | AR. Ramalingam | | Grade I Tamil Pandit (Selection grad |
| 9 | " | T. Kanniah | | " " |
| 10 | " | S. Sethu | | " " |
| 11 | " | V. Venkataraman | | Sec. Grade Asst (Selection grade) |
| 12 | " | V. Seshadri | | " " |
| 13 | " | S. Meenakshisundaram | | " " |
| 14 | " | S. Chinnakkaruppan | | " |
| 15 | " | A Arulandu | | " |
| 16 | Tmt. | V. Rajalakshmi | | " (Selection grade) |
| 17 | " | S. Sulochana | | " |
| 18 | " | V. Meenakshi | | " |
| 19 | Thiru | P. Sethu | B. A., B. P. Ed. | Hr. Grade PET (Selection grade) |
| 20 | " | KM. Murugappan | | Lr. Grade PET " |
| 21 | " | A. Arumuganainar | | Wea. Instructor " |
| 22 | " | M. Jayakkodi | | Drawing Master " |
| 23 | " | AL. Murugappan | | Junior Asst. " |
| 24 | " | KS. Ramamurthy | | Junior Asst. " |
| 25 | " | N. Karuppiah | | Librarian " |
| 26 | " | M. Muthiah | | Peon. " |
| 27 | " | VR. Muthiah | | Watchman. |

Members list continued:-

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | ,, | K. P. AR. N. Narayanan Chettiar | ... | Member |
| 26 | ,, | A. PR S. Subramanian Chettiar | ... | ,, |
| 27 | ,, | VR. Sethuraman Chettiar | ... | ,, |
| 28 | ,, | N. K N. K. Krishnappa Chettiar | ... | ,, |
| 29 | ,, | V. S. Valliappa Chettiar | ... | ,, |
| 30 | ,, | S. PL. AL. Alagappa Chettiar | ... | ,, |
| 31 | ,, | RM PL. Alagappa Chettiar | ... | ,, |
| 32 | ,, | N. K. S. V. Vellaiyan Chettiar | ... | ,, |
| 33 | ,, | PR. S. RM. Lakshmanan Chettiar | ... | ,, |
| 34 | ,, | M. RM. Muthiah Chettiar | ... | ,, |
| 35 | ,, | N. K. V. Vellaiyan Chettiar | ... | ,, |
| 36 | ,, | CT Kathiresan Chettiar | ... | ,, |
| 37 | ,, | M. Muthuppalaniyappa Chettiar | ... | ,, |
| 38 | ,, | SV. Ramanathan Chettiar | ... | ,, |
| 39 | ,, | L. Muthiah Chettiar | ... | ,, |
| 40 | ,, | SP. M. CT. Muthiah Chettiar | ... | ,, |
| 41 | ,, | S. V V. Mutharasappa Chettiar | ... | ,, |
| 42 | ,, | N. VE. N. Narayanan Chettiar | ... | ,, |
| 43 | ,, | A. VR. A Anagappa Chettiar | ... | ,, |
| 44 | ,, | S. P. M. SP. Subramaniyan Chettiar | ... | ,, |
| 45 | ,, | KR. M. KR. Karuppan Chettiar | ... | ,, |
| 46 | ,, | S. V. S. Alagappa Chettiar | ... | ,, |
| 47 | ,, | ST. PR. Thittani Chettiar | ... | ,, |
| 48 | ,, | PR. PL. Ramasamy Chettiar | ... | ,, |

## Merit at a Glance

List of Pupils of our School awarded National Scholarships at the Secondary Stage for talented Children from Rural areas.

| Year | Name of the Pupil |
|---|---|
| 1972 - 73 | D. Ramasubramanian |
| 1974 - 75 | C. Sathappan |
| 1975 - 76 | V. Muthu |
| 1976 - 77 | V. Subramanian |
| 1978 - 79 | S. Murali |
| 1979 - 80 | S. Mohan |
| 1980 - 81 | R. Manimuthu |
| 1981 - 82 | S. Ananth and M.A. Sundararajan. |

Continue ...



*1930-40*

Headmaster,

S M S. Kalasalai Elementary School



Shri. K.L. Kannappan,
B A ,B.Ed.,
Headmaster,
S.M.S. Hr Sec. School



Shri. AL. Murugappan,
S M S. Hr. Sec School.
(Honourary Assistant
S.M S. Education Association)



Thiru K L Kannappan B A , B.Ed,
From 1966.



Thiru. O. Sivaraman. M.A.B T. avl
1960-1966



Thiru. V Gopalakrishnan B.A.L T. avl 1953-1960

# பிள்ளை ஒரு தொல்லையா?

—புலவர் சோம. சிவப்பிரகாசம். எம். ஏ.

எள்ளுப் பூவின் மூக்கும் - பூ
இதழைப் போன்ற நாக்கும்
கள்ளம் இல்லா நெஞ்சும் - உயர்
கவிதைச் சுவையை மிஞ்சும்.

மழலை பேசல் ஏனோ - தினம்
மனமும் மகிழத் தானோ
குழந்தை இல்லா வீடே - வீண்
குப்பை சேர்ந்த மேடே.

சின்னக் கையின் வீச்சும் - உள்
செல்லத் திணறும் மூச்சும்
பன்னீர் வடியும் வாயும் - நாம்
பார்க்க விழிகள் தோயும்

கண்கள் இரண்டும் வண்டு - மலர்
கைகள் இரண்டும் செண்டு
பண்கள் உம்மிடம் தோற்கும் - இதைப்
பைந்தமிழ் நூல்கள் ஏற்கும்.

பெண்ணை ஆணை இணைப்பாய் - உயர்
பெரும்புகழ் வாழ்வில் இணைப்பாய்
உண்மை அன்பின் பாலம் - நீ
உளதால் உளதே ஞாலம்!

## Percentage of our S.S.L.C. Results

| Year | XI Std. | Percentage |
|---|---|---|
| 1960 - 61 | ... ... ... | 81 |
| 1961 - 62 | ... ... ... | 85 |
| 1962 - 63 | ... ... ... | 63 |
| 1963 - 64 | ... ... ... | 75 |
| 1964 - 65 | ... ... ... | 91 |
| 1965 - 66 | ... ... ... | 80 |
| 1966 - 67 | ... ... ... | 85 |
| 1967 - 68 | ... ... ... | 95 |
| 1968 - 69 | ... ... ... | 97 |
| 1969 - 70 | ... ... ... | 88 |
| 1970 - 71 | ... ... ... | 92 |
| 1971 - 72 | ... ... ... | 92 |
| 1972 - 73 | ... ... ... | 84 |
| 1973 - 74 | ... ... ... | 81 |
| 1974 - 75 | ... ... ... | 87 |
| 1975 - 76 | ... ... ... | 98 |
| 1976 - 77 | ... ... ... | 95 |
| 1977 - 78 | ... ... ... | 80 |

## X Std. New Pattern

| | | |
|---|---|---|
| 1977 - 78 | ... ... ... | 71 |
| 1978 - 79 | ... ... ... | 84 |
| 1979 - 80 | ... ... ... | 91 |
| 1980 - 81 | ... ... ... | 92 |

Members list continued :-

| | | | |
|---|---|---|---|
| 25 ,, | L. Muthiah Chettiar | ... | Member |
| 26 ,, | A. PR. S. Subramanian Chettiar | ... | ″ |
| 27 ,, | PR. PL. Ramasamy Chettiar | ... | ″ |
| 28 ,, | RM. Muthiah | ... | ″ |
| 29 ,, | K. T. N. A. V. T Thenappa Chettiar | ... | ″ |
| 30 ,, | M. Alagappan | ... | ″ |
| 31 ,, | AL. Ariappan | ... | ″ |
| 32 ,, | M. AL. SP. AL. SP. Subramanian | ... | ″ |
| 33 ,, | T. Alagappan | ... | ″ |
| 34 ,, | M. Ramasamy Chettiar | ... | ″ |
| 35 ,, | S. Meenakshisundaram | ... | ″ |
| 36 ,, | K. AL. Narayanan Chettiar | ... | ″ |
| 37 ,, | A. PR Periakaruppan Chettiar | ... | ″ |
| 38 ,, | VS. Alagappa Chettiar | ... | ″ |
| 39 ,, | M. S. RM. S. AL. Sathappa Chettiar | ... | ″ |
| 40 ,, | K. T. N. A. Thenappan | ... | ″ |
| 41 ,, | T. Chidambaram | ... | ″ |
| 42 ,, | SM. KR Karuppan Chettiar | ... | ″ |

## S. M. S. Kalasala - Elementary School,

## KILASAVALPATTI.

### Staff.

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. | K. R. Ramavenkatasubramanian | Headmaster. |
| 2 | " | K. Venkatraman | Asst. |
| 3 | " | S. Venkatanarayanan | " |
| 4 | " | P. Suppiah | " |
| 5 | " | AL. Alagappan | " |
| 6 | " | RM. Nallamuthan | " |
| 7 | Tmt. | M. Sivagami | " |
| 8 | " | N. Vasanthal | " |
| 9 | " | S. Padmavathi | " |
| 10 | " | K. Padmavathy | " |
| 11 | " | S. Kanakambujam | " |
| 12 | " | S. Janaki | " |
| 13 | " | V. Balamani | " |
| 14 | Selvi. | M. Nagarathinam | " |
| 15 | Thiru. | VR. Chelliah. | Peon. |

## Members of the Staff of our S. M. S. Hr. Sec. School and SMS, Kalasala, Ele, School.



Photos by : **Mr. M. Valliappan**
Sundaram Studio,
KARAIKUDI

ial Estate,
UINDY,
s - 600 032.

ranges.

Operated)
ipment for
Size mixing
1604

nical,)

S. M. S. Education Association,

KILASAVALPATTI.

## List of Members - 1981.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Thiru. | ST. PR. Thittani Chettiar | ... | President |
| 2 | ,, | RM. PL. Alagappa Chettiar | ... | Secretary |
| 3 | ,, | K. T. N. RM. T. Thenappa Chettiar | ... | Executive Council Member. |
| 4 | ,, | RM. M. SM. Muthappa Chettiar | | |
| 5 | ,, | RM. Alagappa Chettiar | ... | ,, |
| 6 | ,, | AL. A. M. KR. Kasiviswanathan Chettiar | ... | ,, |
| 7 | ,, | E. N. M N. Muthiah Chettiar | ... | ,, |
| 8 | ,, | PL. M. CT. M. Kasiviswanathan Chettiar | ... | ,, |
| 9 | ,, | AR KN. Arunachalam Chettiar | ... | ,, |
| 10 | ,, | N. S. KR. S. Karuppiah Chettiar | ... | ,, |
| 11 | ,, | T. M. KR. K. Ramanathan Chettiar | ... | ,, |
| | ,, | L. Kannappan Headmaster | ... | (Ex-officie) Member. |
| 12 | ,, | M. AL. Ramanathan Chettiar | ... | |
| 13 | ,, | M. CT. Krishnappa Chettiar | ... | ,, |
| 14 | ,, | N. K. N. K. Krishnappa Chettiar | ... | ,, |
| 15 | ,, | V. S. Valliappa Chettiar | ... | ,, |
| 16 | ,, | SV. Ramanathan Chettiar | ... | ,, |
| 17 | ,, | N. VE. N. Narayanan Chettiar | ... | ,, |
| 18 | ,, | KR. M. KR. Karuppan Chettiar | ... | ,, |
| 19 | ,, | PR. S. RM. Lakshmanan Chettiar | ... | ,, |
| 20 | ,, | CT. Kathiresan Chettiar | ... | ,, |
| 21 | ,, | S. V. V. Mutharasappa Chettiar | ... | ,, |
| 22 | ,, | M. Muthuppalaniyappa Chettiar, | ... | ,, |
| 23 | ,, | S. V. S. Alagappa Chettiar | ... | ,, |
| 24 | ,, | N. K. V. Alagappa Chettiar | ... | ,, |

P. T. O.



THE FRONT VIEW OF OUR SCHOOL BUILDING

# INTRODUCTION

We are very happy to present our Souvenir of Sri Meenakshi Sundareswarar Education Association Kilasavalpatti in commemoration of upgrading of our High School as Higher Secondary School on behalf of its members. It is our endeavour to make the Souvenir informative, interesting and not merely a collection of Advertisments, although it is essential for the main source of income for the Associaticn for its various Educational Welfare Schemes.

Our special thanks are due to all those persons who have helped us to collect Advertisements, who had contributed Articles and messages and those who have worked for the successful celebration of the function on the 1st November 1981.

To all those who have been helping us in our various Schemes.

**Dr. K. VENKATASUBRAMANIAN,** M.A.,B.L.,B.T.,Ph.D.
Director of School Education & SCERT
Chairman Board of Higher Secondary Education
Tamil Nadu

Phones  Off. 89201
Res. 71809
Per. 88796

MADRAS-600 006.

Date.......................



Dear Thiru Muthiah,


It is really heartening that the Keelasevalpatty Elementary School started in 1926 is now blossoming into a Higher Secondary School as Sri Meenakshi Sundareswarar Higher Secondary School, Keelasevalpatti.

The socio-economic development of the Country will ultimately depend on the development of Rural Education and I am indeed very happy to know that the Meenakshi Sundareswarar Higher Secondary School will be rendering yeomen service in the cause of Rural Education under your able and efficient guidance. I wish the institution all prosperity.

Kind Regards,

Yours sincerely,

(K. VENKATASUBRAMANIAN)



Dr. Raja Sir Muthiah Chettiar, of Chettinad.

**Dr. RAJAH
SIR MUTHIAH CHETTIAR
OF CHETTINAD**

Chettinad House, Adyar,
Rajah Annamalai Puram P.O.
MADRAS-28.

5th October, 1981.

I am happy to know that Sri Meenakshi Sundareswarar Higher Secondary School, Keelasevalpatti started in 1926 as Elementary School and up-graded as High School in 1949 and that is an Higher Secondary from 1981, is growing from strength to strength. I am also happy to know that there are 583 students on the roll in the school, now. Further more is my happiness to know that every year the school is securing 80% Pass and that particularly this year it has reached 92%

I have much pleasure in offerieg my felicitations to Mr. RM. Muthiah the distinguished Chairman of the Bank of Madura and the other members of the committee who are taking keen interest in the welfare and prosperity of the school.

I am happy that our distinguished Director of School Education, Dr. K, Venkatasubramanian is presiding over the school function on the 1st of November, 1981. I wish the function all success and the Sri Meenashi Sundereswarar Higher Secondary School all prosperity and continued service in the field of education.

M. A. Muthiah Chettiar

(M. A. MUTHIAH CHETTIAR)

# எங்கள் பள்ளியைப்பற்றி...

**(தொகுப்பு : திரு. அழ. முருகப்பன்)**

இன்றைக்கு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் மேல்நிலைப் பள்ளியென மக்கள் அறியும் இப்பள்ளி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருவருளால் கீழச்சிவல்பட்டி, பி. அழகாபுரி நகரத்தார் பொருளுதவி பெற்று 1923-ம் ஆண்டு மார்ச் திங்கள் 14-ம் நாள் அரசியலார் விதிகட்கும், கட்டுப்பாட்டிற்கும் உட்படாத, அரசியலார் பொருள் உதவியையும் நாடாத பண்டை முறையில் முற்றிலும் ஒரு தமிழ்ப் பள்ளியாக ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கலாசாலை என்ற பெயரால் இவ்வூர் அம்மன்சன்னதி வீதியிலிருக்கும் பாடுவார் முத்தப்ப செட்டியார் மடத்தில் தொடங்கப் பெற்றது.

இத்தமிழ்க் கலாசாலையை முதன் முதலாக யாழ்ப்பாணம் திரு. வ. மு. இரத்னேஸ்வர அய்யர் அவர்களும் பின்னர் திரு. அ. சரவண முதலியார் அவர்களும் தலைமை ஏற்று நடத்தி வந்தார்கள்.

1925-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 25-ஆம் நாள் இப்பள்ளிக்கட்டடத்திற்கு மாற்றப்பெற்று 1928-ஆம் ஆண்டு அரசியலார் அங்கீகாரம் பெற்று உயர்தர ஆரம்பப் பள்ளியாக உயர்த்தப்பெற்றது. இதில் 8 வகுப்புகள் வரை நடைபெற்று வந்தன.

பள்ளியின் நிர்வாகம் 1934-ஆம் ஆண்டு வரை இவ்வூர் தனவணிகப் பெருமக்களான உயர்திரு எ. நா. காசி விஸ்வனாதன் செட்டியார் அவர்கள், உயர்திரு. அ. பெரி. பழ சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் இருவர் வசமும் பின்னர்த் தனித்து எ. நா. காசி விஸ்வனாதன் செட்டியார் அவர்கள் வசமும் இருந்து வந்தது.

1949-ஆம் ஆண்டு முற்பகுதிவரை இவ்வூருக்கு அண்மையிலுள்ள உயர்தரப் பள்ளிகளுக்கோ, திருச்சி, புதுக்கோட்டை, திருக்காட்டுப்பள்ளி போன்ற தொலைவிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கோ சென்று கல்வி பயின்றதில் தாங்கள் அனுபவித்த உடல், பொருள் கஷ்டங்களை வெகுவாக உணர்ந்த இளைஞர்கள் பலர் உள்ளூரிலேயே உயர்நிலைப்பள்ளி உடனடியாகத் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியத்தை இவ்வூர்ப் பெருமக்கள் சிலருக்கு வலியுறுத்தினர். அதன் விளைவாகத் திரு. எ. நா. காசி விஸ்வனாதன் செட்டியார் அவர்கள் பெருமுயற்சி எடுத்து உயர்நிலைப்பள்ளி அவசியம் ஆரம்பிக்க வேண்டுமென்ற ஆர்வமுள்ள நகரத்தார் பலருடைய ஒத்துழைப்புடன் கீழச்சிவல்பட்டி, பி. அழகாபுரி நகரத்தார்களிடம் நன்கொடை பெற்று 1949-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாள் அரசியலார் அனுமதியுடன் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப் பெற்றது. இதைச் சார்ந்த தொடக்கப்பள்ளி வேறு இடத்திற்கு மாற்றப்பெற்றது. இந்த உயர்நிலைப்பள்ளிக்கு முதல் தலைமை ஆசிரியராகக் காலஞ்சென்ற மதிப்புக்குரிய திரு. எஸ். இராகவாச்சாரி அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். தலைமை ஆசிரியருக்குரிய அத்துணை அருங்குணங்களும் உடையவர் திரு. எஸ். இராகவாச்சாரி அவர்கள் என்று கூறினால் அது மிகையாது.

இக்கல்வி ஸ்தாபனங்களை நிர்வகிக்க ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் கல்விக்கழகம் ஆரம்பிக்கப் பெற்று 1949-ஆம் ஆண்டு பதிவு செய்யப் பெற்றது. இதன் முதல் தலைவராக காலஞ்சென்ற திரு. எ. நா. காசி விஸ்வனாதன் செட்டியார் அவர்களும், முதல் செயலராக காலஞ்சென்ற திரு. மு. அள. ஆரி. அழகப்ப செட்டியார் அவர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். பள்ளியின் நிதி முதலிய வசதிகளை உருவாக்குவதில் இவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி யாவரும் அறிந்ததே.

திரு. எ. நா. காசி விஸ்வனாதன் செட்டியார் அவர்கள் காலஞ்சென்ற பிறகு காலஞ்சென்ற திரு. எ. நா. மு. நா. நாராயணன்

செட்டியார் அவர்களும் காலஞ்சென்ற திரு. எ. நா. கா. அழகப்ப செட்டியார் அவர்களும் முறையே இரண்டாவது, மூன்ருவது தலைவர்களாக இருந்து பள்ளிக்கு பல நன்மைகளைச் செய்தனர்.

1951 - முதல் திரு. ஏஎல். ஏஎம். கேஆர். காசிவிஸ்வநாதன் செட்டியார் அவர்கள் செயலராக இருந்து பள்ளிக்குச் சிறப்பான பணியைப் பல ஆண்டுகள் செய்துவந்தார்கள். தற்பொழுது தலைவராகத் திரு எஸ்டி. பிஆர். திட்டாணிச்செட்டியார் அவர்களும் செயலாளராகத் திரு. ஆர்எம். பிஎல். அழகப்ப செட்டியார், பி.எஸ்சி. அவர்களும், பள்ளிக்குச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிருர்கள்.

இக்கலைக்கோயிலின் வளர்ச்சிக்குப் பள்ளி தொடங்கிய காலத்தில் பி. அழகாபுரி, கீழச்சிவல்பட்டி நகரத்தார் பெருமக்கள் பலரிடமும், விராமதி, ஆவினிப்பட்டி நகரத்தார் சிலரிடமும், செய்கோனில் கடைகள் உள்ள பி. அழகாபுரி, கீழச்சிவல்பட்டி நகரத்தார் களிடமும், மலேசியாவில் உள்ள நமது ஊர் அன்பர்களிடமும் நன்கொடைகள் பெற்றது குறிப்பிடத்தக்கது.

எந்த உயர்நிலைப் பள்ளியும் அதற்கென ஏற்படுத்தப்பெற்ற ரூ. 35,000 - மூலதனத்திலிருந்து கிடைக்கும் வருவாய், மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் சம்பளத் தொகை குறிப்பிட்ட சர்க்கார் மான்யம் இவைகளை மாத்திரம் கொண்டு நடத்துவது சாத்யமில்லை. ஏதாவது ஒரு கைப்பொறுப்பை எப்பொழுதும் நிர்வாகத்தினர் ஈடு செய்யத்தான் வேண்டியதிருக்கும். இவ்விஷயம் நம் பள்ளி போன்ற சிறு பள்ளிகள் விஷயத்தில் மிகமிக உண்மையாகும். அப்பொழுது பள்ளியின் சராசரி வருடாந்திர கைப்பொறுப்பின் அளவு ரூ. 4000. இதை ஆண்டுதோறும் திரட்ட மீண்டும் தனிப்பட்ட தனவணிகப் பெருமக்களிடம்தான் நன்கொடையாகப் பெறவேண்டியிருந்தது.

ஆண்டுதோறும்ஏற்பட்ட பற்றுக்குறையை ஸ்ரீ. மீ. சு. கல்விக்கழக வைப்பு நிதியிலிருந்து வரும் வருமானத்தின் மூலம் பெறுவதற்குக் கல்விக்கழகத்திற்கென்று வைப்பு நிதி அமைக்க இயலவில்லை. எனவே, ஒவ்வொரு ஆண்டும் அவ்வப்பொழுது பி. அழகாபுரி, கீழச்சிவல்பட்டி நகரத்தார்கள் சிலரிடமும், சில ஆண்டுகள் மீனுட்சி கிளப் அங்கத்தினர்களிடமும் நன்கொடையாகப் பெற்று வந்தோம்.

உயர்நிலைப்பள்ளி ஆரம்பித்த 3, 4 ஆண்டுகளில் பள்ளியில் இடவசதிக் குறைவின் காரணமாக அப்பொழுது ஸ்ரீ. மீ. சு. கல்விக் கழகத் தலைவராக இருந்த காலஞ்சென்ற திரு. எ. நா. காசி விஸ்வனுதன் செட்டியார் அவர்கள் தமது சொந்தச் செலவில் சுமார் ரூபாய் 5000 பெறுமான இரு வகுப்பறைகள் கொண்ட கட்டடத்தை அமைத்துக் கொடுத்தார்கள்.

ஆண்டுதோறும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்ததால் போதிய அளவு வகுப்பறைகள் இல்லாமல் இருந்தது. புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமையில் 1957-ஆம் ஆண்டு பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு அரசாங்கத்தாரிடமிருந்து லோக்கல் டெவலப்மெண்ட் திட்டத்தில் ரூபாய் 10,000 பெறுவதற்கு அனுமதி கிடைத்தது. ஆனுல் நமது கல்விக்கழகமும் தனக்குள்ள ரூபாய் 10,000ஐத் திருப்பத்தூர்க் கிளைக் கருவூலத்தில் முன் பணமாகக் கட்ட வேண்டும். ஆனுல் பணம் இல்லை. பலரிடமும் முயன்றோம், முதலில் பலன் கிடைக்கவில்லை. பின்னர் முதல் செயலராக இருந்த காலஞ்சென்ற திரு. எம். ஏஎல். ஏஆர். அழகப்ப செட்டியார் அவர்கள், அப்பொழுது செயலராக இருந்த திரு. ஏஎல். ஏஎம். கேஆர். காசிவிஸ்வனுதன் செட்டியார் அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்த காலஞ்சென்ற திரு. வி. கோபாலகிருஷ்ணன், தற்பொழுது பணியாற்றிக்கொண்டிருக்கும் திரு. ஏஎல். முருகப்பன் அவர்களது பெருமுயற்சியினுல் 5 வகுப்பறைகள் கொண்ட இக்கட்டடத்திற்கு வகுப்பறை ஒன்றிற்கு ரூபாய் 2000 வீதம் முறையே 1. திரு. நா.கி. வெ. வெள்ளையப்ப செட்டியார் அவர்களிடமும், 2 திரு. தெ. மு. கரு. சொ. தியாகராஜன் செட்டியார் அவர்களிடமும், 3. நா. சொ. கரு. சொக்கலிங்கஞ் செட்டியார் அவர்களிடமும், 4. விராமதி எஸ்வி. கேடி. வித்தியாசாலையாரிடமும், 5. சிறுகூடல்பட்டி ஏஎல். சீனிவாசன் அவர்களிமும் நன்கொடையாகப் பெற்று அரசாங்க

மானியம் ரூபாய் 10,000-த்துடன் ஓர் ஓட்டுக் கட்டடமாகக் கட்டுவதற்கு ஏற்பாடாயிற்று. ஆனுல் சில ஆண்டுகளில் மாணவர்களின் தொகை அதிகரிக்கும் என்ற காரணத்தால் மீண்டும் வகுப்பறைகள் தேவைப்படும் என இக்கட்டடத்தைத்தார்சுக்கட்டடமாகக்கட்ட முடிவு செய்யப் பெற்றது. இதனுல் ஏற்பட்ட கூடுதல் செலவுத் தொகையை ஸ்ரீ. சு. கல்விக் கழகம் கொடுத்தது. இப்புதிய கட்டடம் 1957-ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப் பெற்று 1959-ஆம் ஆண்டு கட்டி முடித்து காலஞ் சென்ற தமிழ்நாட்டுமுதலமைச்சர்மாண்புமிகு திரு. காமராஜ் அவர்களால் சிறப்பாகத் திறந்துவைக்கப்பட்டது.

1963-ஆம் ஆண்டு வரை பள்ளியின் நிதி நிலைமை பற்ருக்குறையாகவே இருந்து வந்தது. பின்னர் அந்த ஆண்டிலிருந்தே ஆசிரியர்களுக் கும், அலுவலர்களுக்கும், அரசாங்கம் முழு மானியத்தைக் கொடுக்க ஆரம்பித்தது. அதனுல் பள்ளிக்கு ஏற்பட்ட பற்ருக்குறை நீங்கியது. பள்ளிக்கு என்றுள்ள வைப்பு நிதி யிலிருந்து வரும் வட்டியைக் கொணடு பள்ளி யின் இதரச் செலவுகளைச் செய்து வந்தது. நிதி நிலைமை ஓரளவு போதுமானதாக இருநது வந்தது. ஆனுல் பள்ளியின் மேல் வளர்ச்சிக் குப் போதுமான நிதி பெருமளவில் இல்லை.

1978-ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் உயர்நிலைப் பள்ளிகளில் மேலும் இரு வகுப்புக் களை ஆரம்பிதது அவைகளை மேல்நிலைப்பள்ளி யாக உயர்த்தியது. மேல்நிலைப்பள்ளியாக வேண்டுமென்ருல் அதற்குப் போதிய வகுப் பறைகள் கொண்ட கட்டடமும், விஞ்ஞான ஆய்வுக் கூடமும், கட்டடை நிதியும், விளையாடு வதற்குப் போதுமான இடமும் வேண்டும். நமது கல்வி மாவட்டத்தில் நமது பள்ளி ஒரு சிறந்த பள்ளியாகக் கல்வி இலாகாவினுலும், மற்றவர்களாலும் கருதப்பட்டாலும் மேற் கூறிய தேவைகள் அனைத்தும் போதிய அளவு இல்லாமல் இருந்த காரணத்தால் உடனே மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த முடியவில்லை. 1949-ஆம் ஆண்டுக்கு முன்னதாக உள்ள காலம் மீண்டும் ஞாபகத்திற்கு வந்தது. 11, 12-ஆம் வகுப்புகளைத் தொடர்ந்து படிக்க நமது ஊர் மாணவர்கள் திருப்பததூர், திருமயம் போன்ற ஊர்களுக்குச் சென்று படிக்க வேண்டிய நிலைமை மீண்டும் ஏற் பட்டது. இவ்வாறு 2.3 ஆண்டுகள் சென்றன. 1980-ஆம் ஆண்டு இறுதியில் இதற்கு ஒரு வழி கிடைத்தது.

மதிப்பிற்கும் பெருமைக்கும் உரிய மதுரை வங்கித் தலைவர், நமது ஊர் நன்மகன் திரு. இராம. முத்தையா செட்டியார் அவர்களும், நமது ஊர் திரு. எம். அழகப்பன் (மானேஜர், கோட்டயம் டெக்ஸ்டைல்.) அவர்களும் நமது உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டு அதற்கான முயற்சியைச்செய்ய ஆரம்பித்தார்கள். முயற்சி பலன் அளித்தது. திரு. ஆர்எம். முத்தையா செட்டியார் அவர்கள் பெருமுயற்சி எடுத்து அரசாங்கத்துடனும், கல்வி இலாகாவுடனும் தொடர்பு கொண்டு இவ்வாண்டே (1981) நமது உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளி யாக உயர்த்துவதற்கு அனுமதி பெற்றுத் தந்தது, நமக்குக் கிடைத்த முதலுதவி. மேலும் மேல்நிலைப்பள்ளி வளர்ச்சி அனைத் திற்கும் வேண்டிய பொருளாதார நிலையை மிக உயர்ந்த நிலைக்கு ஆக்கிக் கொடுத் திருப்பது முழு உதவி. பல ஆண்டுகளாக நிறைவு பெருத இச்சிறப்பு மிக்க பணியை நிறைவுபெறச் செய்தது, ஓர் வியத்தகு சாதனை மட்டுமல்ல; போற்றுதற்குரிய சாதனை யுமாகும். அவர்களது முயற்சியின் பலனாக நமது கலைக் கோயிலுக்கு ஒரு இராசகோபு ரத்தை அமைத்துக் கொடுத்துவிட்டார்கள். மற்றும் உள்ள தொழிற்கலைக் கோயிலை அமைத்துத்தர முயற்சி செய்து வருகிருர்கள். அவர்களது முயற்சிக்கு நமது ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்வரர் அருளும். நமத ஊர்ப் பெரு மக்களது உதவியும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நமது உயர்நிலைப்பள்ளி இவ்வாண்டு ஜூலை மாதம் 13-ஆம் தேதி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பெற்று 11-ம் வகுப் புடன் தொடங்கப்பெற்றது. தற்போது 81 மாணவ, மாணவிகள் சேர்ந்து படித்து வருகின்றனர். வகுப்பறைகள், ஆய்வுக்கூடம் முதலியன இனிமேல்தான் அமையவிருக் கின்றன. அதற்கான வேலைகள் அனைத்தும் நமது கல்விக் கழகத்தார் செய்து வருகிருர் கள். விரைவில் அவைகள் எல்லாம் செவ்வனே

முடிக்கப்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**தலைமை ஆசிரியர்கள்:**

முதல் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய திரு. எஸ். இராகவாச்சாரியார் அவர்களுக்குப் பிறகு காலஞ்சென்ற திரு. வி. கோபால கிருஷ்ணன் அவர்களும், பின்னர் தற்பொழுது சேலம் வித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளியில் தலைமை வகிக்கும் திரு. ஓ. சிவராமன் அவர்களும் இவ்வுயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர்களாக இருந்து மிகவும் சிறந்த முறையில் பள்ளியை நடத்தி வந்தனர். கடந்த 15 ஆண்டுகளாகத் தற்பொழுது நமது மேல்நிலைப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியராக இருந்து வரும் திரு.எல். கண்ணப்பன் அவர்கள் மிகவும் திறமையுடன் பள்ளியை நடத்தி வருவது நாம் எல்லோரும் அறிந்ததே. கடந்த 32 ஆண்டுகளாக மாணவர்களது கடமை, கட்டுப்பாடு, ஒழுக்கம் முதலியன மிகவும் சிறந்த முறையில் இருந்து வருகின்றன. கல்வியின் தரத்திலும் இப்பள்ளி மாணவர்கள் சிறந்து விளங்குகிறார்கள். அரசியலார் நடத்தும் பள்ளி இறுதித் தேர்வில் ஆண்டுதோறும் மிக அதிகச்சதவீதம் வெற்றி பெற்று இக்கல்வி மாவட்டத்தில் ஒரு சிறந்த பள்ளியாகத் திகழ்கிறது. இதற்குக் காரணம் தலைமை ஆசிரியரின் திட்டமிட்டு மேற்பார்வை செய்யும் வேலை நல்ல பயன்தரக்கூடிய முறையில் இருப்பதே ஆகும். உண்மையுடன் உழைக்கும் உடனுறை ஆசிரியர்கள் அவர்கள் தம் வேலையில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு ஓர் திலகமாக உழைக்கின்றனர்.

நமது பள்ளிக்கு நற்பெயரைப் பொது மக்களிடமிருந்தும் கல்வி அதிகாரிகளிடமிருந்தும் வாங்கித்தரத் துணை செய்த மேல்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு எங்களது நன்றி.

**விளையாட்டிடம்:**

விளையாட்டிடத்தின் பரப்பு ஐந்தரை ஏக்கர். இவ்விளையாட்டிடத்தில் கடந்த 32 ஆண்டுகளாக வாடகையின்றி விளையாட அனுமதி கொடுத்த இவ்வூர் அழ. மு. உள்ளிட்டார்க்கு எங்களது நன்றி. தற்பொழுது நமது ஸ்ரீ. மீ. சு கல்விக் கழகத்தார், அதைப் பள்ளிக்கென்று விலைக்கு வாங்கியிருக்கிறார்கள்.

**தொடக்கப்பள்ளி:**

இப்பள்ளியை நமது கல்விக் கழகத்தார் நிர்வகித்து வருகின்றனர். தொடக்கப்பள்ளி வாடகைக் கட்டடத்தில் இருந்து வருகிறது. அதற்கென்று ஓர் சொந்தக் கட்டடம் இல்லை. சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய முயற்சிகளை நமது கல்விக் கழகத்தார் செய்து வருகின்றனர்.

**தலைமை ஆசிரியர்:**

தொடக்கப் பள்ளியில் தற்போது தலைமை ஆசிரியராகப்பணியாற்றி வரும் திரு. கே.ஆர். இராமவெங்கடசுப்பிரமணியன் அவர்கள் 1957-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தலைமைப் பொறுப்பேற்று 24 ஆண்டுகளுக்கு மேலாகத் துணை ஆசிரியர்களின் முழு ஒத்துழைப்போடு பள்ளியை நன்முறையில் நிர்வகித்து வருகிறார். 1977-ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் நல்லாசிரியர் விருதினையும் அன்னார் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**பள்ளியின் வருங்காலம்:**

அரசியலார் வரையறுத்துள்ள ரூ. 60,000 மூலதனம் நிதிவசதி, போதுமான கட்டட வசதி, ஐந்தரை ஏக்கர் பரப்புள்ள சொந்த விளையாட்டிடம், ஈடுபாடு நிறைந்த நிர்வாகக் குழு—இந்த அடிப்படை வசதிகள் கிடைத்துவிட்ட அளவில் பள்ளியின் வளர்ச்சிக்கு வருங்காலத்தைப்பற்றிய அச்சமோ, ஐயமோ கிடையாது என்பது உறுதி. ஆயினும் வருங்காலம் இன்னும் சிறப்பாக அமைய ஆவன செய்வது அவசியம்.

தங்கள் காலடியில் கிடைக்கும் கல்வி வசதியை தங்களால் இயன்ற மட்டும் விரிவுபடுத்த உதவவும், ஆதரிக்கவும் வேண்டியது இவ்வூர்ப் பெருமக்களின் கடமை.

இவ்வறிவுக் கோயிலில் பயிலும் மாணவர்கள் உடலுறுதியும், உள்ளுறுதியும், கடமையுணர்ச்சியும், தாய்மொழிப் பற்றும், ஏட்டறிவும், தொழிலறிவும், எல்லாவற்றிற்கும் மேலாக இறைப்பற்றும் நிறைந்து உருவாகவேண்டும் என்பது நமது ஆசை.

மேலும் நமது மாணவர்கள்,

''எப்பொருள் யார்;யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற தெய்வப்புலவரின் வாக்கிற்கேற்ப அறிவுத் திறனும் மிகுந்து,

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்றபடி பன்மையில் ஒருமை கண்டு, புற வேற்றுமைகளுக்கு அப்பால் பொருள்களை ஊடுருவி நிற்கும் இறுதிச் சக்தியை உணர்ந்து இன்பமும் நலமும் நிலவும் புத்துலகொன்றை நிறுவும் சக்திகளாக இயங்க ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் அருள்புரிவாராக.

இறுதியாகப் பெருமக்களுக்குப் பாரதியாரின் பாக்களை நினைவுபடுத்துகிறோம்.

நிதிமி குந்தவர்
பொற்குவை தாரீர்!
நிதிகு றைந்தவர்
காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர்
வாய்ச்சொ லருளீர்!
ஆண்மை யாள
ருழைப்பினை நல்கீர்!

# பள்ளி வாழ்த்து!

-சுத்தானந்த பாரதியார்-

கலைமகள் அருளினால்
கனிதமிழ் வளத்தினால்
நிலைபெருந் திருவினால்
நிலாவுக கலாலயம் !

ஏட்டுக்கல்வி வீட்டுக்கல்வி
ஏற்றமாந் தொழிற்கல்வி
நாட்டுக்கல்வி ஓங்கியிங்கு
நல்லவீரர் வருகவே !

உடலுறுதி உள்ளுறுதி
உண்மையான நன்னடை
கடமைகாக்கும் திண்மையோங்கிக்
கண்மணிகள் வாழ்கவே !

அங்கயற்கண் அம்மையும்
அழகனும், முருகனும்
மங்கலம் பொலியக் கல்வி
மன்றம் பொலிக பொலிகவே !

சிறுமதுரை யூரிலே
பெருமதுரைச் சங்கம்போல்
அறுவகைச் சமயத்தின்
அறிவுப்பள்ளி வாழ்கவே !

# பாடுவார் பாடிய செயங்கொண்ட சோழீசர்

**தே. சொக்கலிங்கம், எம். ஏ., பி. ஓ. எல்.,**
தமிழ்ப் பேராசிரியர், அழகப்பா கல்லூரி—காரைக்குடி.

மக்களிடையே வழங்கும் அரிய பழமொழி களைத் தொடர்புற ஒவ்வொரு பாட்டிலும் அமைத்துக் கடவுளைப் போற்றும் நூல் செயங் கொண்டார் சதகம். இந்நூலிலுள்ள நூறு பாக்களும் அறுசீராசிரிய விருத்தங்கள். தண் டலையூர்ச் சிவபிரானை முன்னிலையாக்கிப் பழ மொழிகளை அமைத்துப் பாடியது தண்டலை யார் சதகம். செயங்கொண்டார் சதகமோ, பழமொழியையும் அதை விளக்க ஒரு கதையை யும் கூறிச் செயங்கொண்ட சோழீசரைப் போற்றுகிறது.

## நூலாசிரியரும் நூல் அமைப்பும்:

செயங்கொண்டார் சதகத்தைப் பாடிய அருட்புலவர் பாடுவார் முத்தப்ப செட்டியார்,

'அத்தைநிகர் எனச்செயங்கொண் டார்மீதில்
முத்தையன் சிற்றறிவி னாலே
மத்தகெசம் தனக்குமுன்னே சிற்றெறும்பு
நடந்ததென வசனித் தேனே"

என்ற பாடற்பகுதியால் புலவரின் பெயரை யும் தன்னடக்கத்தையும் உணரலாம்.

சதக நூல்கள் பாட்டுடைத்தலைவன் பெயரைக்கொண்டே வழங்கும். ஒன்பது நகரக் கோயிலுள் ஒன்றான நேமங்கோயிலைச் சார்ந்தவர் கவிஞர் பெருமான். அதனால் அங் கெழுந்தருளியுள்ள செயங்கொண்ட சோழீ சரைத் தலைவனாக்கி இந்நூலை யாத்துள்ளார். ஒவ்வொரு பாட்டின் மூன்றும் அடியிலும் இறைவனை விளித்து நீதியைச் செப்புகிறார். இவ்வாறு இறைவனை அழைப்பது பெரும் பாலான பாடல்களில் (மூன்றும் அடி) மூன்றும் சீரில் அமைந்துள்ளது. பாடல்தொறும் விளி யாக அமைந்த பகுதியே இறைவன் சிறப்பைப் பாடும் பகுதியாகும்.

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒரு பழ மொழி; அந்தப் பழமொழியை விளக்க ஒரு கதை; அக்கதையை முதலிரண்டு அடிகளில் சுருங்கக் கூறியிருப்பர் ஆசிரியர்; கதைகள் இராமாயணம், பெரியபுராணம், பாரதம், நளசரிதம், பஞ்சதந்திரம் ஆகியவற்றில் உள் ளவை. கதைக்குப் பின்னே செயங்கொண்ட சோழீசரைப்பற்றிப் பாடுவர். செயங் கொண்டார் சதகப் பாடல்கள் ஒவ்வொன்றும் இத்தகைய அமைப்பின.

## பெயர்க் காரணம்:

நூலின் தொடக்கத்தில், வெயிலுகந்த கணபதி, குன்றக்குடி முருகன், கலைமகள் ஆகிய மூன்று கடவுளருக்கு வணக்கம் கூறுகிறார், அடுத்து, அவையடக்கம். ஆக, நூலில் நூற்று நான்கு பாக்கள். இந்நூலைச் செயங்கொண் டார் சதகம்' என்றும் ''செயங்கொண்டார் வழக்கம்' என்றும் வழங்குவர். 'வழக்கம்' என்ற பெயர் வழங்குவது புதுமையானது. வழக்கம் என்றால் நீதி.

''வழக்குஅன்று கண்டாய் வலிசகடம் செற்றாய்
வழக்குஎன்று நீமதிக்க வேண்டா"
(இரண்டாம் திருவந்தாதி; 19)

என வழக்கு ''நீதி" என்ற பொருளில் பயிலக் காணலாம். இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாட்டிலும் உள்ள பழமொழி நீதி உணர்த்துவ தால் 'வழக்கம்' என்ற பெயர் பொருந்துவ தாகும்.

## சதகச் சிறப்பு:

செயங்கொண்ட சோழீசர்மீது கலம்பகம், பிள்ளைத்தமிழ் நூல்களும் பாடுவார் முத்தப்பச் செட்டியார் பாடியுள்ளார். ஆனால், அவை கிடைக்கவில்லை. செயங்கொண்ட சோழீ சரைப் பாடுவதை நோக்கமாகக் கொண்டு இச்சதகத்தைப் பாடியுள்ளார் ஆசிரியர். வெறும் தோத்திரமாய்ப் பாடியிருந்தால் அது பூசைப் பாட்டாய்ப் போயிருக்கும். ஆத தால், இளைஞரும் முதுஞரும் பயிலும் வண்ணம் கதையையும் கருத்தையும் பொருத்திச் சதக

நூலைப் புதுமையாகப் படைத்துள்ளார். இம்முறையால் இறைவனைப் புகழுதலும் போற்றுதலும் அளவானதாய்-ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாய் அமைந்துவிட்டது என்பது நினைக்கற்பாலது.

### பாட்டுடைத் தலைவன் சிறப்பு :

செயங்கொண்டார் சதகப் பாட்டுடைத் தலைவன் செயங்கொண்ட சோழீசர். அப் பெருமானைத் திருமுக விலாசத்தில்

''...............................அள்ளி நிதி
செய்யும் நியமச் செயங்கொண்ட சோழீசர்
தையல் சவுந்தரியைத் தாள்பணிவோர்''

என்று பாடிப் பரவுவார். செயங்கொண்ட சோழ மன்னனால் பிரதிட்டை செய்யப்பெற்றமையால் 'செயங்கொண்ட சோழீசர்' என்று இறைவன் பெயர் பெற்றான்.

செயங்கொண்டாருக்கும் சௌந்தரிய நாயகிக்கும் நேமங்கோயிலில் தனித்தனி சன்னிதி. ஆனால், பாடுவாரோ அம்மையப்பராக நூல் முழுமையும் சுட்டுகிறார். ''செல்லாருங்குழலி சவுந்தரியை யிடப்பா கம்வைத்த செயங்கொண்டார்'' (22) என்றும் ''தென்னேம நகரில்வாழ் சௌந்தரநாயகி மகிழ்ந்த செயங்கொண்டாரே'' (30) என்றும் மாதொரு பாகனாகப் பாடி மகிழ்வர்.

### தோற்றப் பொலிவு :

சிவனுக்குச் சிறந்த அழகு சடைமுடி; களைகண் அற்றவரைக் காக்கும் தன்மை காட்டுவது இச்சடைமுடி. கலையிழந்த சந்திரனை யேற்றுக் காத்தது இச்சடைமுடி. அக்கருத்தை உணர்த்தும் வண்ணம் ''வெண்ணிலவைச் சடையில் வைத்த'' (26) என்று கூறுகிறார். மேலும், ''இண்டை புனை சடையாரே'' (15); ''பெண்ணுளைச் சடையில் வைத்த'' (13)எனச் சடையழகையும் சில பாடல்களில் அணியழகையும் (58.08), வேறு சில பாக்களில் (18,79). உடையழகையும் தோன்றப் பாடினார், முத்தப்பர்.

### முழுமுதற்கடவுள் :

நேமங்கோயிலில் உள்ள வேறு எக்கடவுளைப்பற்றியும் புலவர் குறித்தார் அல்லர். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கருதியமையால் அவரையே போற்றுகிறார். அன்றித் திருமால், இந்திரன் முதலியோரும் பணிவதாக உரைப்பர். ''கைத்திகிரியோன் பணியும்'' (17), ''ஆழிதனில் பள்ளிகொள்ளும் மால் பணியும்'' (51), ''பேச்சிமுலையுண்ட முகில் பணிசெயங் கொண்டாரே'' (55) என்பன திருமால் பணிவதைக் காட்டுகின்றன. ''வெள்ளானைக் கிறைபணியும் செயங்கொண்டாரே'' (14) என்பது இந்திரன் தொழுவதை எடுத்தியம்புகிறது.

சிவபெருமான் நான்முகன் தலையைக் கிள்ளியதையும் பிரமகபாலம் ஏந்தி அலைந்ததையும் யமனை வென்றதையும் மன்மதனை எரித்ததையும் ஆகிய புராணக் கதைகளையும் திருவிளையாடல் நிகழ்ச்சிகளையும் செயங்கொண்டாரொடு தொடர்புபடுத்திப் பாடியுள்ளார். இவை நேரடியாகக் கதையாக இடம்பெறுமல் செயங்கொண்டார் செயலாக-சிறப்பாக - வருகின்றன.

### தமிழ்க் கடவுள் :

சிவனைப் பாடும் தமிழ்ப்புலவரெல்லாம் ஆண்டவனைத் தமிழொடு இணைத்துப் பாடுதல் இயல்பாகும். செயங்கொண்டார், ''தண்டமிழுக்கு அருள் புரியும்'' (29) தகையாளர் என்பர். எண்ணியதை இனிமைத் தமிழ்க் கவிதை பாடி முடித்த பாடுவார் இவ்வாறு இயம்புவது பொருத்தமானதாகும். மற்றோரிடத்து, ''பாக்கியம் செந்தமிழுக்கு உதவும் செயங்கொண்டார்'' (62) எனக் குறிப்பர். அகத்தியர் (78) சுந்தரமூர்த்தி நாயனர் (74, 87) ஆகியோரைச் சுட்டுவர்.

எனினும், சிவபெருமானுக்குப் பொதுவாகச் சொல்லும் சிறப்புகளையே இவர் செயங்கொண்ட சோழீசருக்கு ஆக்கினர். இவர்க்குரியன என விதந்து சொல்லத்தக்க சிறப்பு ஒன்றும் இல்லை.

### கவலை போக்கும் கடவுள் :

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்
தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

என்பது திருக்குறள். இறைவன் திருவடிகளில் வந்தனை வைத்தபோதுதான் சிந்தை வெங்கொடும் துயர் தீரும். செயங்கொண்டார் வழிபாடு மனக்கவலை மாற்றும் மாண்புடையது.

(13-ம் பக்கம் பார்க்க)

# எனது பள்ளிப் பணியில் 25 ஆண்டுகள் (1956 - 1981)

அழ. முருகப்பன்

நான் இப்பள்ளியில் 1956-ஆம் ஆண்டு, தொடர்ந்து இப்பள்ளிப் பணியிலே நீடித்து இருக்க வேண்டும் என்ற எண்ணமில்லாமல் சேர்ந்தேன். காரணம், அயல்நாடு செல்ல வேண்டும் என்பதுதான். அயல்நாடு செல்ல முயன்றும் பலன் அளிக்கவில்லை. அப் பொழுதே நான் வங்கியில் சேர்ந்திருப்பின் மிக அதிகமான சம்பளமும் கிடைத்திருக்கும். அதிர்ஷ்டக் குறைவின் காரணமாக இப்பள்ளி யிலே தொடர்ந்து பணிபுரியும் நிலைமை ஏற்பட்டது.

நான் பள்ளியில் சேர்ந்த காலம் பள்ளியின் நிதிநிலைமை பற்றுக்குறையாக இருந்தது. அப்பொழுது அரசாங்கம் முழுமான்யம் அளிக்கவில்லை. இதன் காரணமாக மாதந் தோறும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் போடு வதில் தாமதம் ஏற்பட்டது. அரசாங்கம் பள்ளிக்குரிய குறிப்பிட்ட மானியத்தை ஆண் டிற்கு இரு முறைகள்தான் கொடுக்கும். எனவே மாதந்தோறும் வேண்டிய சம்பளத் தின் பற்றுக்குறையை ஒருசில வேண்டிய பிர முகர்களிடம் கைமாற்ருக வாங்கிச் சம்பளம் போட்டு வந்தது, எனது முக்கிய பணியாக இருந்தது.

இந்த நிலைமையில் 1957-ஆம் ஆண்டு தொடக்கத்தில் பள்ளிக்கு ஒரு கட்டடம் கட்டு வதற்கு ரூ. 10,000 அரசாங்க மான்யம் கிடைத்தது. பாக்கியை நமது ஸ்ரீ. மீ. சு. கல்விக் கழகத்தார் மூலம் பெற வேண்டும். அப்பொழுது பள்ளிக்கு ஆண்டுதோறும் ஏற் பட்ட பொருளாதாரப் பற்றுக்குறையை அவ் வப்பொழுது ஒருசில பிரமுகர்களிடம் நன் கொடையாகவும், கைமாற்ருகவும் பெற்று வந்ததால் கட்டடம் கட்டுவதற்குரிய பணத்தை உடனே பெற இயலவில்லை. பள்ளிக்கென்று நன்கொடை கொடுத்தவர்களிடமே திரும்பக் கேட்க வேண்டியிருந்தது. பலரிடம் முயன் ரும். பலனளிக்கவில்லை. ஆனல் நானும் முன்னுள் தலைமை ஆசிரியராக இருந்த காலஞ் சென்ற திரு. வி. கோபாலகிருஷ்ணன் அவர் களும் பெருமுயற்சி எடுத்து அரசாங்க மானியத்தை உபயோகப்படுத்தி எப்படியும் இக் கட்டடத்தைக் கட்ட வேண்டும் என முடிவு செய்து பல தடவைகள் இது சம்பந்த மாக காலஞ்சென்ற முன்னுள் தலைவர் திரு. எ. நா. காசி விஸ்வநாதன் செட்டியார் அவர் களைப் பார்த்தோம். அந்தச் சமயத்தில் இந்த நல்ல காரியத்திற்கு வசதி உள்ளவர்கள் உடனே முன்வரவில்லை என்ற காரணத்தால் சிறிது கோபமாக உங்கள் இருவருக்கும் கட்ட டப் பைத்தியம் போகவில்லை. உங்கள் முயற்சி யினல் கட்டடம் கட்டிவிட முடியுமா என்று கூறினர்கள். ஆனல் நாங்கள் முயற்சியைக் கைவிடவில்லை. முயற்சி பலனளித்தது. அரசாங்கத்திடம் கட்டட மான்யம் ரூ. 10000 பெற வேண்டும் என்றுல் நமது கல்விக் கழக மும் ரூ. 10000 திருப்பத்தூர் கிளைக் கருவூலத் தில் முன் பணமாகக் கட்டவேண்டும். ஆனல் உடனே கட்டுவதற்குப் பணம் இல்லை. கிளைக் கருவூலத்தில் பணம் கட்டுவதற்கு நிர்ணயிக் கப் பெற்ற கடைசித் தினத்தன்று கைமாற்ருக ஒருசில பிரமுகர்களிடம் ரூ. 5000 பெற்று முதல்தவணையாகக் கட்டினேம். காலஞ்சென்ற முதல் செயலர் திரு. எம். ஏஎல். ஏஆர். அழகப்பசெட்டியாரவர்களதுமுயற்சியினலும், எங்களது முயற்சியின் பலனுகவும் 5வகுப்பறை கள் கொண்ட இக்கட்டடத்திற்கு .5 பிரமுகர் களிடமிருந்து நன்கொடையாக ரூ. 2000 வீதம் ரூ. 10,000மும், அரசாங்க மானியம் ரூ. 10,000மும், மிகுதியை ஸ்ரீ. மீ. சு. கல்விக்

கழகத்தாரும் கொடுத்து உதவினர். 1957ஆம் ஆண்டு கட்டம் கட்டத் தொடங்கி 1959ஆம் ஆண்டு சிறப்பான முறையில் கட்டடம் கட்டி முடிக்கப் பெற்று, காலஞ்சென்ற முன்னாள் தமிழ்நாட்டுமுதலமைச்சர் திரு. கே. காமராஜ் அவர்களால் திறக்கப்பெற்றது. அன்று இக்கட்டடம் கட்டுவதற்கான செலவு ரூ. 30,000 ஆயிற்று. ஆனல் இன்று இக்கட்டடம் கட்டுவதாக இருந்தால் சுமார் ஒன்றரை லட்சம் செலவாகும்.

*1963*-ஆம் ஆண்டிலிருந்துஆசிரியர்களுக்கு உள்ள முழுச்சம்பளத்தையும் அரசாங்கமே கொடுக்க ஆரம்பித்தது. பள்ளிப் பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைந்தது. இன்று வரை பள்ளி, நிதிநிலைமையில் போதிய அளவினதாகவும், கல்வித்தரத்தில் உயர்வாகவும் இருந்து வந்தாலும் பள்ளியின் மேல் வளர்ச்சிக்கு நிதி வசதி குறைவாக இருந்து வந்தது.

இந்த நிலைமையில் இப்பள்ளியின் வளர்ச்சி இன்னும் பெருகிட இவ்வாண்டு (1981) மதிப்பிற்குரிய திரு. இராம. முத்தையா செட்டியார் (மதுரை வங்கித் தலைவர்), திரு. மு. அழகப்பன் (கோட்டயம் டெக்ஸ்டைல்ஸ் மானேஜர்) ஆகிய இருவர்களது பெருமுயற்சியால் நமது பள்ளி மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தப் பெற்றிருப்பது நமது ஊர் மாணவ மாணவிகளுக்குத் தொடர்ந்து படிக்க அரிய வாய்ப்பினை அளித்துள்ளது. இதனல் எனது பணியும் அதிகமாயிற்று. கடந்த 6, 7 மாதங்களாக இப்பள்ளிப் பணியில் நான் அதிகம் ஈடுபட்டு, தொடர்ந்து மேல்நிலைப்பள்ளி வளர்ச்சிக்கு என்னல் இயன்ற பணியைச் செய்யும் நிலைமையில் உள்ளவனக இருக்கிறேன். அது எனது கடமை ஆகும். எனது விருப்பமும் அதுவே,

பள்ளியின் பொருளாதார நிலைமையும் தற்பொழுது திரு. ராம. முத்தையா செட்டியார் அவர்களின் இடையருத முயற்சியால் மிக உன்னத நிலைக்கு உயர்த்தப் பெற்று, வருங் காலத்தில் பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்துள்ளது.

பொதுவாக உள்ளூர்ப் பள்ளியில் வேலை செய்து கடினம். எல்லோரும் உரிமை கொண்டாடுவார்கள். எல்லோருக்கும் நல்லவராக அவர்களுக்குத் தகுந்தாற்போல் நடக்க வேண்டும். அந்த வகையில் கடந்த 25 ஆண்டுகளாக நான் எனக்குத் தெரிந்தவரை ஓரளவு நமது ஊர்ப் பெருமக்களுக்கும், வெளியூர்ப்பெருமக்களுக்கும் என்னல் இயன்ற வரை இப்பள்ளியில் நல்லதைச் செய்திருப்பதாக நினைக்கிறேன். ஊர்ப்பெருமக்களது கருத்தும் அவ்வாறே இருக்குமென நான் முழுமையாக நம்புகிறேன்.

பொதுவாக நமது பள்ளிக்கு எனது கடமையை நான் செய்தேன். நமது பள்ளியின் வளர்ச்சி, எப்பொழுதும் பொருளாதாரக் குறைவின் காரணமாகத் தாமதப்பட்டு இறுதியில் மிகவும் நல்ல முடிவைப் பெறும். இது எனது பள்ளிப்பணியில் நான் கண்ட உண்மை.

நான் இப்பள்ளிக்கு இன்னும் அதிகம் பணியைச் செய்யும் வாய்ப்பு இப்பொழுது கிடைத்துள்ளது ஆனல், நான் பள்ளியிலிருந்து ஓய்வு பெறும் காலமும் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. ஓய்வு பெறும் வரை என்னல் முடிந்த பணியை நமது பள்ளிக்குச் செய்யக் காத்திருக்கிறேன்.

கடந்த 25 ஆண்டுப் பணியில் என்னைக் கௌரவத்துடன் மதிக்கத் தகுந்தவனக நடத்திய நமது ஸ்ரீ. மீ. சு. கல்விக் கழக உறுப்பினர்கள் அனைவருக்கும், நமது ஊர்ப் பெருமக்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும், பழைய மாணவ மாணவிகளுக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# எல்லாம் இரண்டுவிதம்

கவிஞர் சிவல்புரி சிங்காரம்
கீழச்சிவல்பட்டி—623 205.

இன்பம் தந்தவன் துன்பம் தந்தான்,
எதையும் தாங்குதற் காக! - நல்ல
அன்பு தந்தவன் வம்பும் தந்தான்,
ஆற்றல் கொள்வதற் காக!

பகலைத் தந்தவன் இரவும் தந்தான்,
பணிகள் ஓய்வதற் காக - நல்ல
புகழைத் தந்தவன் இகழும் தந்தான்,
பொறுமை கொள்வதற் காக!

உறவைத் தந்தவன் பிரிவும் தந்தான்,
உள்ளம் வெல்வதற் காக! - நல்ல
வரவைத் தந்தவன் செலவும் தந்தான்,
வறுமை உணர்வதற் காக!

நிழலைத் தந்தவன் வெயிலும் தந்தான்,
நிலைமை புரிதற் காக - நல்ல
மழலை தந்தவன் முதுமை தந்தான்,
மரணம் அறிவதற் காக!

இரண்டு விதத்தில் எதையும் தந்தான்
இறைவன் உலகிற் காக - அந்த
இயல்பை நினைத்து வணக்கம் சொன்னது
இரண்டு கரங்க ளாக!